ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.8 – மாயா வாமனனே

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# 7.8 – மாயா வாமனனே

‡ மாயா ! வாமனனே ! ⋆
மதுசூதா ! நீ அருளாய் ⋆
தீயாய் நீராய் நிலனாய் ⋆
விசும்பாய் காலாய் ⋆
தாயாய் தந்தையாய் மக்களாய் ⋆
மற்றுமாய் முற்றுமாய் ⋆
நீயாய் நீ நின்றவாறு ⋆
இவை என்ன நியாயங்களே ! ॥ **7.8.1** ॥

அங்கண் மலர்த் தண் துழாய் முடி ⋆
அச்சுதனே ! அருளாய் ⋆
திங்களும் ஞாயிறுமாய்ச் ⋆
செழும் பல் சுடராய் இருளாய் ⋆
பொங்கு பொழி மழையாய்ப் ⋆
புகழாய் பழியாய்ப் பின்னும் நீ ⋆
வெங்கண் வெங்கூற்றமுமாம் ⋆
இவை என்ன விசித்திரமே ! ॥ **7.8.2** ॥

சித்திரத் தேர் வலவா ! ⋆
திருச் சக்கரத்தாய் ! அருளாய் ⋆
எத்தனை ஓர் உகமும் ⋆
அவையாய் அவற்றுள் இயலும் ⋆
ஒத்த வொண் பல் பொருள்கள் ⋆

உலப்பில்லனவாய் வியவாய் ⋆
வித்தகத்தாய் நிற்றி நீ ⋆
இவை என்ன விடமங்களே ! ‖ **7.8.3** ‖

கள் அவிழ் தாமரைக் கண் ⋆
கண்ணனே ! எனக்கொன்றருளாய் ⋆
உள்ளதும் இல்லதுமாய் ⋆
உலப்பில்லனவாய் வியவாய் ⋆
வெள்ளத் தடங்கடலுள் ⋆
விட நாகணைமேல் மருவி ⋆
உள்ளப் பல் யோகு செய்தி ⋆
இவை என்ன உபாயங்களே ! ‖ **7.8.4** ‖

பாசங்கள் நீக்கி என்னை ⋆
உனக்கே அறக் கொண்டிட்டு ⋆
நீ வாச மலர்த் தண் துழாய் முடி ⋆
மாயவனே ! அருளாய் ⋆
காயமும் சீவனுமாய்க் ⋆
கழிவாய்ப் பிறப்பாய்ப் பின்னும் நீ ⋆
மாயங்கள் செய்து வைத்தி ⋆
இவை என்ன மயக்குக்களே ! ‖ **7.8.5** ‖

மயக்கா ! வாமனனே ! ⋆
மதியாம் வண்ணம் ஒன்றருளாய் ⋆
அயர்ப்பாய்த் தேற்றமுமாய் ⋆
அழலாய்க் குளிராய் வியவாய் ⋆
வியப்பாய் வென்றிகளாய் ⋆
வினையாய்ப் பயனாய்ப் பின்னும் நீ ⋆

துயக்காய் நீ நின்றவாறு ⋆
இவை என்ன துயரங்களே ! ‖ **7.8.6** ‖

துயரங்கள் செய்யும் கண்ணா ! ⋆
சுடர் நீள் முடியாய் அருளாய் ⋆
துயரம் செய் மானங்களாய் ⋆
மதனாகி உகவைகளாய் ⋆
துயரம் செய் காமங்களாய்த் ⋆
துலையாய் நிலையாய் நடையாய் ⋆
துயரங்கள் செய்து வைத்தி ⋆
இவை என்ன சுண்டாயங்களே ‖ **7.8.7** ‖

என்ன சுண்டாயங்களால் ⋆
நின்றிட்டாய் என்னை ஆளும் கண்ணா ⋆
இன்னதோர் தன்மையை என்று ⋆
உன்னை யாவர்க்கும் தேற்றரியை ⋆
முன்னிய மூவுலகும் அவையாய் ⋆
அவற்றைப் படைத்து ⋆
பின்னும் உள்ளாய் ! புறத்தாய் ! ⋆
இவை என்ன இயற்கைகளே ! ‖ **7.8.8** ‖

என்ன இயற்கைகளால் ⋆
எங்ஙனே நின்றிட்டாய் என் கண்ணா ⋆
துன்னு கர சரணம் முதலாக ⋆
எல்லா உறுப்பும் ⋆
உன்னு சுவை ஒளி ⋆
ஊறொலி நாற்றம் முற்றும் நீயே ⋆

உன்னை உணர உறில் ⋆
உலப்பில்லை நுணுக்கங்களே ‖ **7.8.9** ‖

இல்லை நுணுக்கங்களே ⋆
இதனில் பிறிதென்னும் வண்ணம் ⋆
தொல்லை நன்னூலில் சொன்ன ⋆
உருவும் அருவும் நீயே ⋆
அல்லித் துழாய் அலங்கல் ⋆
அணி மார்ப ! என் அச்சுதனே ⋆
வல்லதோர் வண்ணம் சொன்னால் ⋆
அதுவே உனக்காம் வண்ணமே ‖ **7.8.10** ‖

‡ ஆம் வண்ணம் இன்னதொன்றென்று ⋆
அறிவதரிய அரியை ⋆
ஆம் வண்ணத்தால் ⋆
குருகூர்ச் சடகோபன் அறிந்துரைத்த ⋆
ஆம் வண்ண ஒண் தமிழ்கள் ⋆
இவை ஆயிரத்துள் இப்பத்தும் ⋆
ஆம் வண்ணத்தால் உரைப்பார் ⋆
அமைந்தார் தமக்கென்றைக்குமே ‖ **7.8.11** ‖

அடிவரவு — மாயா அங்கண் சித்திர கள்ளவிழ் பாசங்கள் மயக்கா துயரங்கள் என்ன என்ன இல்லை ஆம் என்றைக்கும்

மாயா வாமனனே முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்